[2005 செப்டம்பர் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **(மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தவறான ஒரு தகவலை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 49, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

திரு. இ. புகழேந்தி: தவறான தகவல் தருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கே இதைக் கேள்வி நேரத்தில் எழுப்பி, பதில் சொல்லி முடித்தாகிவிட்டது. (குறுக்கீடு) வினா எண் 49, திரு. வெங்கடாஜலம். (குறுக்கீடு) அன்றைக்கே சொல்லி, அன்றைக்கே அமைச்சர் எல்லாம் பதில் சொல்லி முடித்துவிட்டார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் அன்றைக்கே பதில் சொல்லி முடித்துவிட்டார்கள். (குறுக்கீடு)

வினா எண் 49, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

49—

இலவசப் பயிற்சி மையம்

***40887—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் I.A.S./I.P.S. பணித் தேர்வுகளில் பங்குபெற பெண்களுக்கான பிரத்தியேக இலவசப் பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2005 செப்டம்பர் 26]

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் சிசுக் கொலையைத் தடுத்து தொட்டில் குழந்தைத் திட்டத்தை உருவாக்கியது அம்மா அவர்கள். பெண் குழந்தைகளைப் பாதுகாக்க பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கியது அம்மா அவர்கள். மகளிருடைய இன்னல்களைக் களைய மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கியது அம்மா அவர்கள். ஆண்களுக்கு நிகரானவர்கள் பெண்களும் என்பதை நிரூபிக்க மகளிர் commando படைகளை உருவாக்கியது அம்மா அவர்கள். மாணவியர்கள் தொடர்ந்து கல்வி பயில இலவச சைக்கிள்களை வழங்கியது அம்மா அவர்கள். மகளிர் பொருளாதாரத்தில் உயர வேண்டும் என்று மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கியது அம்மா அவர்கள். ஆண்களுக்கு நிகரானவர்கள் பெண்களும் என்பதை நிரூபித்து, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக விளங்கும் அம்மா அவர்களே, பெண்கள், அரசின் உயர் பதவிகளான I.A.S. / I.P.S. போன்ற பட்டங்களைப் பெற பயிற்சி வகுப்பு கொடுத்தால், பெண்கள் மேலும் சிறப்படைவார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, எதிர்வரும் ஆண்டுகளில் பயிற்சி வகுப்பு நடத்த மையம் அமைக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி மற்றும் இதர அகில இந்தியப் பிரிவு–I (Class–I) பணிகளுக்கான முன்தேர்வு மையம் ஒன்று சென்னையில் 1966 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையத்தில் ஆதி திராவிட மாணவ, மாணவியர் 98 பேர்களும், பழங்குடியின மாணவ, மாணவியர் 2 பேர்களும், ஆக மொத்தம் 100 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு, பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மாணவர் சேர்க்கை, நுழைவுத் தேர்வு மற்றும் நேர்காணல்மூலம், மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது. அனைவருக்கும் தங்கும் இட வசதி இலவசமாக வழங்கப்படுகிறது. பயிற்சிக்காகும் செலவு 50 சதவிகிதம் வரை மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் ஐம்பதாயிரத்து தொள்ளாயிரத்து இருபதுக்குள் இருந்தால் உணவும் இலவசமாக வழங்கப்படுகிறது. தற்போது இந்தப் பயிற்சி மையம் 2000 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும்

பிற்படுத்தப்பட்டோருக்கான பயிற்சி மையத்துடன் இணைக்கப்பட்டு, சென்னை, அண்ணா மேலாண்மை நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே, புதிய பயிற்சி மையம் ஆரம்பிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பெண்கள் உயர் பதவிகளுக்கு வருவதற்காக, I.A.S., I.P.S. பதவிகளை, பட்டங்களைப் பெறுவதற்காகப் பயிற்சி மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களே மீண்டும் பரிசீலனை செய்ய ஆவன செயவார்களா என்பதை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்புதான் பெண்களுக்கு முதுகலைப் பட்ட மேற்படிப்பு வரை இலவசமாகக் கற்றுக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலே எந்த மாநில அரசும் இதுபோன்ற திட்டத்தைக் கொண்டு வரவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அம்மா அவர்களுடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 50, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

50—

மாணவர் விடுதி

***69644 திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, புத்தனாம்பட்டி ஊராட்சி, நேரு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

TRUTH ALONE TRIUMPHS